பக்கங்கள்: ஆறு

Fi6(10)

Registered as a Newspaper

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை
ரூ2/50

தரமான சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஷூ சித்திரை மீ 10 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 16 (23-04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-116

# கல்முனையில் பதற்றம்; ரஞ்சன், மன்சூர் விரைவு

## காலவரையறையற்ற ஊரடங்கு; கடைகள் பல எரிக்கப்பட்டன

கொழும்பு, ஏப்ரல் 23

கல்முனை நகரில் காலவரையறையற்ற ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

அங்கு நிலைமை மோசம் அடைந்ததைத் தொடர்ந்து பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினவும், வர்த்தக அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூரும் இன்று கல்முனைக்கு விரைகின்றனர்.

சமரச முயற்சிகளை மேற்கொண்டு, சமாதானத்தை உருவாக்கி அமைதியை நிலைநாட்டும் முயற்சியில் அவர்கள் இருவரும் இன்று ஈடுபடுவர் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இந்திய அமைதிப்படை அதிகாரிகள் சமாதான முயற்சியில் நேற்றுத் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர் என்று மற்றொரு தகவல் தெரிவித்தது.

தமிழ் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து கல்முனை நகரப் பகுதியில் கடந்த புதன்கிழமை (19-4-89) பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

கடத்தல் பற்றிய தகவல் தெரிந்ததும் கல்முனை நகரில் உள்ள கடைகள் அன்று காலை பத்து மணியுடன் மூடப்பட்டன.

கடத்தப்பட்ட இளைஞரின் பெற்றோர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்திய அமைதிப் படையினர் இளைஞரைத் தேடினர்.

கல்முனைக்குடியில் தமிழ்ப் பயணிகள் பெரும்பான்மையினராகப் பயணம் செய்த பஸ் ஒன்றும் கடத்தப்பட்டது.

அன்றைய பதற்றநிலையைத் தொடர்ந்து 19ஆம் திகதி 24 மணி நேர ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

புதன்கிழமைச் சம்பவங்களைத் தொடர்ந்து முஸ்லிம்கள் சிலர் கத்திக்குத்துக்கு ஆளானுர்கள்.

புதன்கிழமை அமுல் செய்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



மனிஷன் தான் தப்பிப் பிழைக்கிற காலமெண்டால், பூமியும் தப்பிப் பிழைக்கிற அளவுக்குக் காலம் பிழைச்சுப் போய்ச்சுதெண்டா கலியுக காலமில்லாமல் வேறு என்ன...?

## யாழ். செயலகத்தில்: பிறப்பு, இறப்பு விண்ணப்பம் ஏற்பது மீண்டும் நிறுத்தம்

யாழ். செயலகத்தில் பிறப்பு, இறப்புச் சான்றிதழுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது மீண்டும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தற்பொழுது விநியோகிக்கப்படாது தேங்கிக்கிடக்கும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து அவற்றுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு முடிந்த பின்னரே மேலும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட உள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-9)

## யாழ். மாநகர சபைக்கு நூல் வழங்கும் வைபவம் நாளை

### அமெ. தூதுவர் ஸ்பெயின் வருகிறுர்

அமெரிக்க அரசாங்கம் யாழ்ப்பாணம் மாநகர சபை நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ள நூல்களை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதர் ஜேம்ஸ் ஸ்பெயின் யாழ்ப்பாணத்தில் வைத்து கையளிப்பார்.

இந்த நூல் அன்பளிப்பு வைபவம் நாளை திங்கட்கிழமை மாலை யாழ். நாவலர் மண்டபத்தில் இடம்பெறும்

சுமார் 6 லட்சம் ரூபா பெறுமதியான 750 விலையுயர்ந்த நூல்களை யாழ். மாநகர முன்னுள் ஆணையாளரும் தற்போது கிளிநொச்சி அரச அதிபருமாக உள்ள திரு. அன்ரன் அல்பிரட்டிடம் தூதுவர் வழங்குவார். (ஒ-எ)

## வேலை வங்கிக்குப் பதில் கம்பியூட்டர் மூலம் தெரிவு

கொழும்பு. ஏப்ரல் 23

தொழில் வங்கி முறைக்குப் பதில் கம்பியூட்டர் மூலம் வேலைவாய்ப்புப் பெறுபவர்களைத் தெரிவுசெய்யும் திட்டம் ஒன்றை அமுல் நடத்துவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

தொழில் வங்கி மூலம் வேலை வாய்ப்புக்கள் வழங்கும் முறை கடந்த 11 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது.

கம்பியூட்டர் மூலம் தொழில் வழங்கும் முறை சகலருக்கும் திருப்தியளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-எ)

## நெடுந்தீவுப் பாடசாலையில் அமைதிப் படையின் முகாம்

நெடுந்தீவு, ஏப்ரல் 23

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை, மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலை ஆகிய இடங்களில் அமைதிப் படையினர் தற்காலிகமாக முகாமிட்டுள்ளனர்.

வெள்ளிக்கிழமை அதிகாலை அமைதிப்படையினர் நெடுந்தீவை முற்றுகையிட்டனர் என்பது தெரிந்ததே.

இப்பகுதியிலுள்ள சில இளைஞர்களையும் சில வியாபாரிகளையும் படையினர் விசாரித்தனர். அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை.

இதேவேளை நேற்று நெடுந்தீவு-குறிகட்டுவான் படகுச் சேவை நடைபெற்றது. [ஒ-111]

## இந்தியப் படையினருடன் ஸ்ரீலங்கா பொலீஸாரும் ரோந்து

மட்டக்களப்பு, ஏப்ரல் 23

மட்டக்களப்புப் பகுதியில் ஸ்ரீலங்கா பொலீஸாரும் இந்தியப் படையினரும் கூட்டு பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கல்லடி, வலையிறவு, கோட்டைமுனை பாலம், ஊறணி முகாம் ஆகிய இடங்களில் நடைபெறும் இந்திய படையின் வழமையான சோதனையில் ஸ்ரீலங்கா பொலீஸாரும் காணப்படுகிறுர்கள்,

இந்திய படையின் வாகன, கால்நடை ரோந்துகளிலும் ஸ்ரீலங்கா பொலீஸாரும் இணைந்துள்ளது.

ஸ்ரீலங்கா பெண் பொலீஸாரும் இதில் அடங்குவர். [ஒ-21]

## இந்திய தூதர் கொழும்பில்

கொழும்பு, ஏப்ரல் 23

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதர் திரு. மெஹ்ரோத்ரா நேற்றுக் கொழும்பு வந்து சேர்ந்தார்.

நாளை இவர் ஜனுதிபதியிடம் தனது நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பார். [ஒ-எ]

## தும்பளையில் ராணுவ ரோந்து

நேற்றுக்காலை தும்பளை கடற்கரை வீதி வழியாக இராணுவத்தினர் ரோந்து சென்றதுடன், தேடுதலிலும் ஈடுபட்டனர்.

அப்போது வெடிச் சத்தங்களும் கேட்டன. ரோந்தின் போது ''செயின் புளக்''கும் கொண்டு செல்லப்பட்டதாம். [ஒ-160]

## ஆளுநர் வெலகெதர காலமானுர்

கொழும்பு, ஏப். 23

வடமத்திய மாகாண ஆளுநர் திரு. டி. பி. வெலகெதர நேற்று அதிகாலை காலமானுர். அவருக்கு வயது 73.

1952இல் குருநாகல் எம். பி யாக முதன்முதலில் இவர் தெரிவு செய்யப்பட்டார்.

பிரதி அமைச்சர், அமைச்சர் பதவிகளை வகித்த இவர் 1988 இறுதியில் வடமத்திய மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

இவரது ஏழு பிள்ளைகளில் ஒருவர் கடந்த பொதுத்தேர்தலில் குருநாகல் மாவட்ட

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பூமி அழிவிலிருந்து மயிரிழையில் தப்பியது! எரிகல் தாக்கத்திலிருந்து!!

வாஷிங்டன், ஏப்ரல் 23

எரிகல் ஒன்றின் தாக்கத்தில் இருந்து பூமி மயிரிழையில் தப்பியதாக அமெரிக்காவின் நாஸா ஸ்தாபனம் அறிவித்தது.

கடந்த மாதம் இந்த விபத்து ஏற்படவிருந்தது.

40 ஆயிரம் ஐதரசன் [Hydrogen] குண்டுகளின் சக்தி கொண்டதாக கருதப்பட்ட அந்த எரிகல் பூமியில் இருந்து 8 லட்சம் கிலோ மீற்றர் [5 லட்சம் மைல்] தொலைவில் வந்து கொண்டிருந்த போது விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். பின்னர் அது திசை திரும்பியது.

கலிபோர்னியாவில் உள்ள பலோமர் அவதான நிலையத்தின் தொலை நோக்கி, பூமியை நோக்கி வந்து கொண்டிருந்த இந்த எரிகல்லைப் படம் பிடித்தது.

பிரஸ்தாப எரிகல் பூமியைத் தாக்கியிருந்தால் வாஷிங்டன் நகரம் அளவு குழி பூமியில் ஏற்பட்டிருக்கும் என்றும் 100 மைல் பிரதேசம் அழிந்து

[6 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களுக்கு அமைதியும் முன்னேற்றமும் கிடைக்கட்டும்

### பிரிகேடியர் காலோன் பிரியாவிடைச் செய்தி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

மக்களுக்கு அமைதியும், சகல சம்பத்தும், முன்னேற்றமும் கிடைக்க வாழ்த்துகிறேன்.



இவ்வாறு இந்திய அமைதிப் படையின் யாழ்ப்பாண நகரக் கொமாண்டராகப் பணியாற்றி நாளையுடன் இந்தியா செல்லும் பிரிகேடியர் ஆர். ஐ. எஸ். காலோன் விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது பிரியாவிடைச் செய்தி வருமாறு:-

யாழ்ப்பாணப் பிரசைகளே, உங்களுக்குப் பிரியாவிடை கூறும் காலம் வந்துவிட்டது. நெருக்கடி மிகுந்த காலம் முதல் இன்று வரை நான் உங்களுடன், உங்களுக்காக உழைத்துள்ளேன். நான் மிகவும் கஷ்டமான சூழ்நிலைகளில் எனது கடமைகளைச் செய்ய நேர்ந்தபோது, அமைதியை நேசிக்கும் யாழ்ப்பாணப் பிரசைகளின் நல்லெண்ணமும், ஒத்துழைப்பும் எனது பணியை இலகுவாக்கின.

ஆனுல் இறுதித் தீர்வு இன்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஈரோஸ் பிரமுகர்கள் கைது

திருகோணமலை, ஏப். 23

திருகோணமலையில் ஈரோஸ் இயக்க முக்கியஸ்தர்கள் இருவர் அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாலாஜி, செந்தில் ஆகியோரே அந்த இருவரும் ஆவர். [ஒ]

## ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நாளை 24ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த இறுதி ஆண்டு மாணவர் பரீட்சை பின்போடப்பட்டுள்ளது.

கோப்பாய், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் மாணவர்களுக்கான இந்தப் பரீட்சை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற இருந்தது. (க)

## 303 பேர் சரண்

கொழும்பு, ஏப்ரல் 23

அரசாங்கம் வழங்கிய சலுகையைப் பயன்படுத்தி நேற்று மட்டும் 20 தென்இலங்கைத் தீவிரவாதிகள் சரணடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

இதுவரை மொத்தம் 303 தீவிரவாதிகள் சரணடைந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## நாடாளுமன்ற குழு நாளை கூடும்

கொழும்பு, ஏப்ரல் 23

அரசாங்க நாடாளுமன்றக் குழு நாளை திங்கட்கிழமை மாலை கூடுகிறது.

நாளை மறுநாள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள சட்ட மூலங்கள் தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. [ஒ-எ]

## வேட்டுக்களும் குண்டுச் சத்தமும்

பச்சிலைப்பள்ளி, ஏப்ரல் 23

நேற்றுக் காலை இத்தாவில், வேம்போடுகேணிப் பகுதிகளில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், பெரும் குண்டுச் சத்தங்களும் கேட்டன.

சேத விவரங்கள் தெரிய வரவில்லை, [ஒ-117]

## பருத்தித்துறையில் நேற்று இடம்பெற்ற மோதல்

வல்வெட்டித்துறை, ஏப்ரல் 23

பருத்தித்துறை, வேலாயுதம் பாடசாலைக்குச் சமீபமாக நேற்றுக் காலை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

சுமார் ஒரு மணித்தியாலம் வரை இடம்பெற்ற இத்தாக்குதல்களின்போது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகங்களும் ஷெல் தாக்குதலும் இடம்பெற்றன.

இதனுல் இப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்தது.

மோதல் இடம்பெற்ற பகுதியில் இருந்து எவரும் வெளியேறவோ அல்லது உட்செல்லவோ அனுமதிக்கப்படவில்லை.

கந்தமுருகேசனுர் வீதியில் கிரனேட் வீச்சுக்களும் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

இதனை அடுத்து அந்தப் பகுதியில் பலர் தாக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கானவர்களில் ஒருவரான புலோலி தெற்குவாசியான வேலாயுதம் கிருஷ்ணபவான் (வயது 25) மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிலர் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டனர். அவர்கள் விடுவிக்கப்பட்டனரா இல்லையா என்பது குறித்து இச்செய்தி எழுதப்படும் வரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை. [ஒ-160]

## வடபகுதி செஞ்சிலுவை சங்கத்துக்கு உதவ கொழும்பு அலுவலகம் தயக்கம்!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

வட பகுதி செஞ்சிலுவைச் சங்கத்திற்கு உதவிகளை வழங்குவதில் கொழும்புத் தலைமையகம் தயக்கம் காட்டி வருவதாகக் குறை கூறப்படுகிறது.

வெளி நாடுகளில் உறுதியளிக்கப்பட்டபடி வட பகுதி தேவைக்கென ஜெனிவா செஞ்சிலுவைச் சங்கத் தலைமைக் காரியாலயம் ஊடாக பல லட்சம் ரூபா பணமும், பொருள்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆனுல் அவற்றை வழங்குவதற்கு கொழும்புச் செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் நொண்டிச் சாட்டுக்களைக் கூறி வருகின்றதாம்.

அதன் காரணமாக வட பகுதி செஞ்சிலுவைச் சங்கம் தனது திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலை உருவாகியுள்ளதாம்.

★ இதன்படி வட பகுதியில் பாதிப்புக்குள்ளான 19 ஆயிரம் குடும்பங்களுக்குத் தலா 175 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் வழங்க திட்டமிடப்பட்டு நிதியும் ஒதுக்கப்பட்டதாம்; ஆனுல் இதுவரை 3 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவக்கூடிய பணம் மட்டுமே கைக்குக் கிடைத்தது.

★ பின்தங்கிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்குத் தேவையான 8 லட்ச ரூபா நிதி கொழும்பிலேயே முடங்கியுள்ளதாம்.

★ வட பகுதியில் நடமாடும் சுகாதார சேவை ஒன்றை நடத்துவதற்கு வாகனங்கள் கேட்கப்பட்டது. அதன்படி ஒரு 'பிக்அப்'

(6 ஆம் பக்கம் பார்க்க]

### சுபநேரம்

23 — 04 — 1989
ஞாயிற்றுக்கிழமை
சித்திரை - 10

சுபநேரம்;
09.04 முதல் 10.34 வரை
ராகுகாலம்:
04.34 முதல் 06.04 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்

கலர் படப் பிரதி ஒன்று
ரூபா 4-75
விநியோகம்:- 3 முதல் 5 நாட்கள்
நவீன கம்பியூட்டர் மூலம் பிரதி செய்ய நாடுங்கள்:
ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் வியாபாரம் நடந்து கொண்டிருக்கும் வீடியோ, ஓடியோ சாதனங்கள் உடன் விற்பனைக்கு உண்டு. 600 வீடியோ கசற் 80 O R G வீடியோ கசற், 140 E .P. ஓடியோ றைக்கோட், 60 L. P. ஓடியோ றைக்கோட் முழுமையாக விற்பனை செய்யப்படும். தொடர்பு; Asian Textiles, Palaly Road, Thirunelvely. (216)

Baraha Farm புரொயிலர் குஞ்சுகள் திங்கட்கிழமை (24- 4- 89)திலும், Hyline வெள்ளை, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்புச் சேவற் குஞ்சுகள் செவ்வாய்க்கிழமை (25- 4- 89)திலும் Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் புதன்கிழமை (26-4-89)திலும் விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (225)

உரும்பராயில் கோப்பாய் வீதியில் 100மீற்றர் தூரமுள்ள ஒழுங்கையில் [தம்பசிட்டி] கிணறுள்ள நாலு பரப்பு வெறுங்காணி வீட்டுக்கோ, தோட்டத்துக்கோ சிறந்தது. தொடர்புகொள்க. க. ஞானசுந்தரம், உரும்பராய் கிழக்கு, உரும்பராய். (3371)

மிக நல்ல நிலையிலுள்ள E. L. 7000 தொடர் இலக்கமுள்ளதும் சொந்தப் பாவிப்பில் உள்ளதுமான மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. இல. 84, மாட்டீன் வீதியில் பார்வையிடலாம். பார்வையிடும் நேரம்: காலை 9-00—மாலை 5-00 மணி. [10655]

10ஸ்ரீ Fiat Car 124 Special Italy Rear wheel விற்பனைக்குண்டு. 27, இரக்கா ரோட், யாழ்ப்பாணம். (214)

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Un-registered Chaly மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு Our Lady Stores 601 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (10658)

### எமது சேவையில்

கலர் பிலிம் சுருள்கள் கொம்பியூட்டரில் Processing & Print பிரதி ஒன்று 4/75 மட்டுமே. அத்துடன் இலவசமாக அல்பம் [Album] குயிக்ஸ்ரார் [மனோகரா சந்திக் கண்மையில்] 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [10626]

### சேவை

தட்டச்சு ரோணியா வேலைகள் மிகத் தெளிவாகவும் குறித்த நேரத்திலும் செய்து கொடுக்கப்படும். Tees Copy 58A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/2317)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler பேட்டுக்கோழி சேவல், சூப் குஞ்சு விருத்துக் குஞ்சு வகைகள் எப்பொழுதும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். எங்கள் ஒழுங்கை முகப்பிலும் எங்கள் பண்ணை வாசலிலும் Nallur Video Centre என்னும் விளம்பர பலகை உண்டு. Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-2087)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

பிறிமா லோமன் வெள்ளை, சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்புச் சேவல் குஞ்சுகள், வளர்ந்த குஞ்சுகள், புரொயிலர் குஞ்சுகள், கோழிகள், கோழித் தீன், கோழிகளுக்கான மருந்து வகைகள். ஆலோசனைகள் ஆகியனவற்றிற்குத் தொடர்பு கொள்ளுங்கள்; பரம் ஏஜென்ஸி, கிளிநொச்சி. (9313)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமாயின ஒருநாள் லோமன் புரொயிலர்க் குஞ்சுகள், லோமன் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 29-4-1989 இல் விநியோகிக்கப்படும். 25-4-89க்கு முன் பதிவு செய்க. குஞ்சுகள் எடுப்பவர்களுக்கு மருந்துகள் இலவசமாக வழங்கப்படும். திருமகள் ஸ்ரோஸ் K. K. S. ரோட், லக்ஸபாம் சென்ரர், திருநெல்வேலி சந்தி. C. S. K. ரேட் சென்ரர் 81 கச்சேரி- நல்லூர் ரோட், (197)

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் Hy - line கறுப்பு வெள்ளை, Silver பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய்/ புதன்கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம். தடுப்பு மருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கொடுக்கப்படும். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 9, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [சி/2088]

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Cobb) புரொயிலர் குஞ்சு, (Dekalb) பிறவுண் சேவல் குஞ்சு (25. 4. 89) செவ்வாய் கிழமை விநியோகிக்கப்படும். சேவல் குஞ்சு விலை ரூபா 4. 50 தொகையாக எடுப்பவர்களுக்கு விசேஷ சலுகை உண்டு. முன்கூட்டியே பதிவு செய்க. இல.9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் (10635)

## 1 ஆம ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு

15 - 7 - 1928

உதிர்வு:

23 - 4 - 1988

### திருமதி கனகநாயகி செல்வரத்தினம்

மனைத்தக்க மாண்புடைமையும்
இல்லறத்தின் ஒளி விளக்காம்
சிறப்பும், இனிமையும், கருணையும்
எழிலும் வாய்ந்த திருவுருவமும்,
எம்மையெல்லாம் மகிழ்விக்கும் இனிய
வார்த்தையுங் கொண்ட
எமது அன்புத் தெய்வமே!

உங்கள் நினைவும், பாசமும் என்றும் எம் உள்ளத்தை விட்டகலாது. என்றென்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

ஆ. செல்வரத்தினம் (கணவர்)
கௌசலா சிவகுமாரன் (மகள்)
பா. சிவகுமாரன் (மருமகன்)
சி. தாரணி, சி. யோகேசன் (பேரப்பிள்ளைகள்)

ஆனைக்குட்டி வளவு,
தெல்லிப்பளை. (221)

### தேவை

சிறுவர், மகளிர் ஆடைகள், மற்றும் பிரேசியர் வெட்டித் தைப்பதில் நல்ல அனுபவமுள்ள பெண் தையல் உதவியாளர் உடன் தேவை. விண்ணப்பிக்கவும்: சாரதி ரெக்ஸ், சித்தங்கேணி. (235)

முல்லைத்தீவு ரவுணில் அமைந்திருக்கும் படப்பிடிப்பு நிலையம் ஒன்றிற்கு அனுபவமும் திறமையும் வாய்ந்த படப்பிடிப்பாளர் தேவை. தகுதிக்கு ஏற்ற சம்பளம் தங்குமிடம் வழங்கப்படும் தொடர்பு; இல: 92, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (211)

வில்வம்பழம் தேவை, மில்க் வைற், யாழ்ப்பாணம். (C-2319)

### மணமகள் தேவை

யாழ் இந்து குருகுல ஜெர்மனியில் வசிக்கும் 36 வயதுடைய மணமகனுக்கு அழகிய சிவந்த 25 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட மணமகள் தேவை. ஜெர்மனியில் வசிக்கும் மணப்பெண்ணுக்கு முதலிடம் கொடுக்கப்படும். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. உடன் தொடர்பு கொள்ளவும். 489, C/o உதயன் யாழ்ப்பாணம். [226]

### மணமகள் தேவை

சைவ உயர் வேளாளகுலத்தைச் சேர்ந்த செவ்வாய் தோஷமுள்ள தொழில் நுட்ப உத்தியோகத்தர் 32 வயதிற்குட்பட்ட வாழ்க்கைத் துணையைத் தேடுகிறார். வன்செயலால் பாதிக்கப்பட்டுத் தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆசிரியைகள் விரும்பத்தக்கது. 490 C/o உதயன், யாழ்ப்பாணம். (227)




### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### New City Traders

Daytron T. V. 12'', 14'' கறுப்பு வெள்ளை, Daytron T. V. 14'', 20'' கலர், Daytron வீடியோ கசெற், Phillips கசெற் ரெக்கோடர், Phillips Gas cooker மற்றும் வீட்டுக்கு தேவையான மின் உபகரண பொருள்களையும் பெற்றுக் கொள்ள New City Traders, 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/2291)

### மணமகன் தேவை

இந்து உயர்குல வேளாள 39 வயது உதயத்தில் செவ்வாய் உள்ள படித்த ஆங்கில அறிவுள்ள மணமகளுக்கு படித்த நற்குணமுள்ள மணமகன் தேவை. பணமும் நகையும்சீதனமாக கொடுக்கப்படும். தொடர்பு: 491C/o உதயன், யாழ்ப்பாணம். (234)

### வகுப்புக்கள்

Typing - Short Hand வகுப்புக்கள் வாரநாட்களிலும் வார இறுதி நாட்களிலும் வெவ்வேறாக நடத்தப்படுகின்றன, பயிற்சி முடிந்ததும் சான்றிதழ் வழங்கப்படும் Bond Institutes, 58Aஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/2316)

## 10 ஆவது ஆண்டு நினைவு தினம்

23 - 04 - 1989



திருமதி

### கமலாதேவி வித்தியானந்தன்

அன்புடன் நினைவு கூருவோர்:

பிள்ளைகள்: அருள்நம்பி, மகிழ்நங்கை, அன்புச்செல்வி, இன்பச்செல்வன், சிவமைந்தன்.

மருமக்கள்: ஜெசிட்டா, இராஜ்மோகன்.

''தமிழகம்''
தெல்லிப்பளை. [10657]

உ

''சாமியே சரணம் ஐயப்பா''

### அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடம்

நடத்தும்

# மாதம் ஒரு ஹோமம்

(விஷேட யாகம்)

சபரிமலை ஸ்ரீஐயப்ப சுவாமிக்கு மாதம்தோறும் நடைபெறும் மாதம் ஒரு ஹோமம் எனும் விஷேட யாகத்தில் உங்கள் பெயர்களும் சேர்க்கப்பட வேண்டுமானல் உங்கள் பெயர், குடும்பத்தினர் பெயர், நட்சத்திரம், வேண்டுதல் என்பனவற்றை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தால்

தங்கள் பெயர்களும் யாகத்தில் சேர்க்கப்பட்டு வீபூதிப்பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

**கலாநிதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியர்**

அவர்களின் அருளாசியுடன்

''ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி'' கிரியா கலாநிதி

**ஸ/ ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சரவணபவக் குருக்கள்**

தலைமையில் யாகம் நடைபெறும்.

ஸ்ரீ ஷடாக்ஷர சரவணபவ சர்மா (நிர்வாகச் செயலாளர்)

ஸ்ரீ சாஸ்தாதாஸன் பாலமூர்த்தி சர்மா (சமயப் பிரசாரகர்)

● கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி;

**வி. குமரன் நாயுடு**
(செயலாளர் நாயகம்)
ஸ்ரீ சாஸ்தா பீடம்,
72, 3ஆவது மாடி,
மத்திய சுப்பர் மார்கட்,
கொழும்பு - 11.

Sri Sastha Peedam,
72, 3rd Floor,
C. C. Super Market,
Colombo - 11.

[சி-2321]

### மன்னார் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

மன்னார், ஏப்ரல் 23

1988-89 கல்வி ஆண்டில் மன்னார் மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரியப்பட்ட மாணவர்கள் ஒன்றிணைந்து பல்கலைக்கழக மாணவர் மன்றம் என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர். (இ)

### தேடுதல்

வடமராட்சி, ஏப்ரல் 23

வடமராட்சியின் மாணண்டி, கம்பர்மலை, அல்வாய், வதிரி, வல்வை, திக்கம் போன்றபகுதிகளில்21ஆம்திகதி வெள்ளிக்கிழமைபெரும் எண்ணிக்கையானஇராணுவத்தினர் தேடுலில் ஈடுபட்டனர். (160)

## கண்ணீர் அஞ்சலி



### உதயகுமார்

(மேஜர் சுபாஷ்)

உன் புதைகுழியை
உன் முதுகிலேயே
சுமந்து திரிந்தவனே!

ஒரு நாட்டை மீட்க
இரு நாடுகளுடன்
போராடியவனே!

உன் மரணம் அழிவற்றது
அதற்கு மரணம் இல்லை.

— நண்பர்கள்.

(C/2230)

## 180 ஆம் நாள் ஆத்மசாந்தி அழைப்பு



### செல்வன் க. பிரேமரூபன்

தோற்றம்: 21 - 03 - 1959

மறைவு: 28 - 10 -1988

சீர் பொழியும் உசன் பகுதியின் சிறப்பு மைந்தா!
சீர் ஏதும் காணுமல் விரைந்து நீ சென்றதேனோ?
ஆலவிருட்சமாய் அன்பு நிழல் தந்தவனே!
சோலையாய் நீ இருந்தாய் சொர்க்கம் என்று
நாம் இருந்தோம்!
சோலை அழித்துவிட்டார் சொந்தம் ஏதும் இல்லை ஐயா!
நாதி அற்றுப் போனதையா (நாசகார செய்கையினால்)
மனம் நொந்த வேளையிலும் மனம் உந்தன்
''மம்மி'' மொழி
தினம் உந்தன் தேன்மொழியைத் தேடுகின்றேன்
கானல்தான்
வாளெடுத்து செல்லவில்லை வாயடைத்து வந்ததென்ன

காங்கேசன்துறை வாழ்ந்த செல்வன் க. ''பிரேமரூபன்'' 28. 10. 88 அகாலமரணம் அடைந்ததால் அவரது ஆத்மசாந்தி 25. 4. 89 செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறை கேசரி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

தனி அறிவிப்பு இன்றி அன்புடையோர், தமிழ் பண்புடையோர் அனைவரும் கைப்பொருளின்றி வருகை தந்து அவர் ஆத்மசாந்திக்கு ஆவன செய்தேகுமாறு அன்னையார் பணிவன்புடன் கரம்கூப்பி வேண்டுகின்றேன்.

ஐயா! உன் ஆத்மாவின் சாந்திக்காய் என் இதய விளக்கேற்றி கண்ணீர் மலர் தூவி ஏந்து கரம் தந்து நின்றேன் என் உயிரே!

சாந்தி கொள்க!

தகவல்:
சி. வேற்கரன்.

கேசரி வீதி,
காங்கேசன்துறை. (231)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

(23-04-1989 ஞாயிறு)



**செல்வி பி. ஸம்யுதா**

கொக்குவில் கிழக்கு உடையார் ஒழுங்கையில் வசிக்கும் பிறேமநாதன் - சாந்தமணி தம்பதிகளின் புதல்வி ஸம்யுதா தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று [23-04-1989] தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை சுவிற்ஸலாந்தில் இருக்கும் அப்பா, அம்மா, தங்கை பிரயுதா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அன்ராமார், வேலணையூர் சற்குணவதி அன்ரா, மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணாமார், நண்பர்கள் அனைவரும் பலகலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(10656)

கப்பலில்

## ★ வேலை வாய்ப்புக்கள் ★

நான்கு கிரேக்க கப்பல்களில்

● உடனடி வேலை வாய்ப்புக்கள் ●

- ✶ 2nd Officers ✶ Bosan
- ✶ 3rd Engineer ✶ Oiler
- ✶ Radio Officers ✶ AB

மேற்காணும் பதவிகளுக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக வந்து தொடர்பு கொள்ளவும்.

✶ சுவிஸ் ✶ இத்தாலி ✶ பிரான்ஸ் ✶ ஜேர்மனி ✶ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்குப் போவதற்கும் உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

**NATIONAL SHIPPING & TRAVELS,**
New Lalitha Building
185/2, KASTHURIAR ROAD,
JAFFNA

(C/2284)

## O/L DAY CLASSES

தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஆரம்பமாகின்றது

24. 04. 1989

**NIRU TUITION CENTRE**
**KONDAVIL.**

(பி/2310)

# 10 மணித்தியாலங்களுக்கு மேல்
# மேலதிக வேலை செய்ய அனுமதி இல்லை

## அரச ஊழியருக்குச் சுற்று நிருபம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

ஓர் அரசாங்க ஊழியர் வாரம் 10 மணித்தியாலங்களுக்கு மேல் மேலதிகவேலை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்ட 19/89 இலக்க சுற்று நிருபத்தின் மூலம் இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

சுற்று நிருபத்தின்படி 50க்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட சகல அரச அலுவலகங்களிலும் ஊழியர்கள் வேலைக்கு வரும், வேலை முடிந்து செல்லும் நேர விவரத்தை பதிவு செய்யும் இயந்திரங்கள் கட்டாயம் வைக்கப்பட வேண்டும்.

முன்னரைப் போன்று ஊழியர் தாம் நினைத்தபடிமேலதிக நேர வேலை செய்யமுடியாது.

தவிர்க்க முடியாதது என காணும் பட்சத்தில் மட்டுமே உயர் அதிகாரியின் அனுமதியுடன் மேலதிக வேலை செய்ய முடியும்.

இவ்வாறு செய்யப்படும் மேலதிக வேலை காலை அலுவலக நேரதின் முன் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

மேலதிகாரியினால் அனுமதிக்கப்படும் மேலதிக வேலைநேர அனுமதியை ஒவ்வொரு மாதமும் புதுப்பிக்க வேண்டும்.

ஒரு வாரத்தில் ஒரு ஊழியர் 10 மணி நேரத்திற்கு மேல் மேலதிக வேலை செய்ய கண்டிப்பாக அனுமதிக்கக் கூடாது.

மேலதிக வேலை நேரத்தைப் பதிவு செய்வதற்கு பிரத்தியேக பதிவு புத்தகம் ஒன்று அவசியம் பேணப்பட வேண்டும்.

அதில் மேலதிக வேலை செய்யும் ஊழியரின் பெயர், பதவி மாதவருமானம், மேலதிக வேலைக்கான மணிநேர வேதனம், மேலதிக வேலைக்கு வந்த நேரம், சென்ற நேரம் என்பவற்றுடன் அந்த நேரத்தில் செய்யப்பட்ட வேலை என்பன தெளிவாக பதிந்து வைத்திருக்கப்படவேண்டும்.

கடந்த 88 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மேலதிகவேலை வேதனம், விடுமுறை நாள் வேலை வேதனம் என்பவற்றை இவ்வருடம் அரைப் பங்காகக் குறைத்துக் கொள்ளும் படியும் கண்டிப்பாக அந்த சுற்று நிருபத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது.

(இ-9)

## படுவான்கரைக்கு தனி பஸ் டிப்போ

அம்பாறை, ஏப்ரல் 23

பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த படுவான் கரைப்பகுதிக்கு தனி பஸ் டிப்போ ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது.

வடக்கு, கிழக்கு மாகாண சபை இதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளவிருப்பதாக மாகாண சபை நிதி அமைச்சர் திரு. பெ.கிருபாகரன்தெரிவித்தார்.

மேலும் படுவான் கரைப் பகுதி மக்களின் நலன் கருதி எதிர்காலத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும்.—

இது விடயத்தில் வடக்கு கிழக்கு மாகாண சபை விஷேட அக்கறை கொண்டு செயல்படுமென்றும் திரு. கிருபாகரன் தெரிவித்தார்.

(இ-14)

## 7000 படையினர் திரும்புவர்

கொழும்பு, ஏப். 23

வருகிற 26 ஆம், 27 ஆம் திகதிகளில் 7 ஆயிரம் இந்திய அமைதிப்படையினர் திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து தாயகம் திரும்புவர்.

இத்தகவலை கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிட்டன. [எ]

## நாடாளுமன்ற உறுப்பினர் பங்கு

கொழும்பு, ஏப். 23

மாவட்ட வளர்ச்சிப் பணிகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிய பங்கு என்ன?

இது பற்றி ஆராய்ந்து முடிவு செய்ய நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று நியமிக்கப்பட உள்ளது.

இத் தகவலை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்தார். (எ)

## கணக்கியல் ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல். 23

க.பொ.த. (உ. த) வகுப்பு கணக்கியல்ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று 26 ஆம், 27 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். (க)

## அறிவித்தல்

நல்லூர் நெசவு பயிற்சிப் பாடசாலைக்கு 1989/1990 பயிற்சி ஆண்டுக்கான மாணவ மாணவியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு 10-05-89 க்கு முன்னர் பின்வரும் தகுதிகள் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வயதெல்லை — 18-25
2. கல்வித்தராதரம் — க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தி (கணிதம், தமிழ் ஆகிய இருபாடங்கள் உட்பட)

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

அதிபர்,
நல்லூர் நெசவு பயிற்சிப் பாடசாலை,
இலக்கம் 194 அரசடிச் சந்தி,
நல்லூர்.

மேலதிக விபரங்களுக்கு அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

உதவிப் பணிப்பாளர்.

(200)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
மூன்றும் வருட விஞ்ஞான பரீட்சை
1988

**கால அட்டவணை மாற்றம்**

CG 36
(Inorganic Chemistry)
02 - 05 - 1989
காலை 9.00 — 11.00 மணி வரை நடைபெறும்.

PG 34/32
(Special Relativity Atomic & Nuclear Physics) 03 - 05 - 1989
காலை 9.00 — 12.00 மணி வரை நடைபெறும்.

பதில் பதிவாளர்.

(இ-2318)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW SCIENCE ACADEMY

B. M. C. முன்பாக JAFFNA.

**தாவரவியல்**

திரு. குணசீலன் (B.Sc.)

24- 04- 89 (திங்கள்) முதல் புதிய பகுதிகள் ஆரம்பமாகின்றன.

**சூழலியல்** (ECOLOGY)

திங்கள், செவ்வாய் — 10. 30 — 12. 00

**நுண்ணுயிரினவியல்** (MICROBIOLOGY)

புதன், வெள்ளி— 10. 30 — 12. 00

மேற்படி பகுதிகள் ஆரம்பித்ததன் பின்னர் அனுமதிகள் இடம்பெறுது.

(C/2314)

## ஜொலிஸ்டார் அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23 ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் பெனின்சுலா சுற்றுக் கிண்ணத்திற்காக நடத்தும் கிரிக்கெட் போட்டியின் ஓர் அம்சமாக, வியாழன் காலை நடைபெற்ற விறுவிறுப்பான கால்இறுதி ஆட்டத்தில் கிருஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிருஸ்கொப்பர்ஸ் அணி 26 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது.

செல்வராஜ் 29, பத்மஜெயன் 24, சிராளன் 18, ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் க. இளங்கோ. டானியல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், ஜெகேந்திரன் 2 விக்கெட்டுக்களையும் செழியன் ஜெயப்பிரகாஷ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் பெற்றனர்.

பின்னர் ஆடிய ஜொலிஸ்டார் அணி 29·2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 24 ஓட்டங்களைப் பெற்றது.

சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய திலீபன் ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களைப் பெற்றார். ஆரம்பத் துடுப்பாட்டக்காரரான இவர் இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும். சுதர்சன் 22 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் சிறீதரன் விக்கெட்டுக்களையும் சுபதாநவின்ராஜ், செல்வராஜ், கிருபாகரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்கள். (ஒ-6)

## இடமாற்றம்

கண்டாவளை அ. த.க. பாடசாலை ஆசிரியர் திரு. என். பாலசுப்பிரமணியம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்துக்கும்– அதே பாடசாலையிலிருந்து திருமதி சித்திரா பாலசுப்பிரமணியம் கொடிகாமம் (நாவலடி) அ. த. க. பாடசாலைக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர். (இ- 75)

## அன்பளிப்பு

புங்குடுதீவு ஏப்ரல் 23 புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயத்திற்கு அக்கிராமத்தைச் சேர்ந்த திரு. வல்லிபுரம் அவர்களின் 31 ஆம் நாள் சிராத்த தினத்தைமுன்னிட்டு இரண்டு உதைபந்துகளும் ஒரு கடிகாரமும் அவருடைய பிள்ளைகளினால் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (க-131)

## பங்களிப்பு

''விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்களும் பங்களிப்பைச் செலுத்தக் கூடிய வகையில் தம்மை தயார்ப்படுத்தி வைத்திருக்க வேண்டும்''.

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுத்துறை அமைச்சினால் சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபம் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க – 16)

## ஜெயதுர்க்கா சோதிட

**வருட மகாதெசைப் பலன்கள்**

27 நட்சத்திரங்களில் ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் ஒன்பது கிரகங்களும் இவ்வருடம் எவ்வெப்போது பலன் கொடுப்பர் என்பதை, திருமதி க.அருளானந்த சர்மா என்பவரால் ''பெரிய வருஷாதி நூலில்'' இருந்து எழுதப்பட்ட சோதிடப் புத்தகம்.

**கற்பக விநாயகர் ஆலயம்**
கணுக்கேணி, முள்ளியவளை.

கிடைக்கும் இடங்கள்:

1. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
2. நாதன் ஸ்ரோர்ஸ் – நல்லூர்
3. எவர் கிறின்ஸ் – நல்லூர்
4. அருள்நாயகி புத்தகசாலை - கொடிகாமம்
5. பிள்ளையார் விலாஸ் - முறிகண்டி
6. லிங்கம் ஸ்ரோர்ஸ் - தண்ணீரூற்று
7. குமரன்ஸ் கிறீம் ஹவுஸ் – முல்லைத்தீவு

[10616]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் V. நாகநாதி**

(தெல்லிப்பழை)

அன்னை மடியில்: 02- 12- 1902 ஆண்டவன் அடியில்: 04- 05- 1988

**திதி- 23- 04- 1989**

தன்னுயிர் போல் பிற உயிரையும் நேசிக்கும் தெய்வமே! நீங்கள் சகோதரருக்கும் பிறருக்கும் செய்த உதவி உங்களது ஆத்மாவிற்கு சாந்தியைக் கொடுக்கும். நீங்களின்றி எங்களுக்கு வழிகாட்ட யாருமின்றி தவிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இளவ் லேன்,
தெல்லிப்பழை. [194]

## உபநயன நன்றி நவிலல்

27-03-89இல் எமது மகன் ஞானகரசர்மாவிற்கு பொன்னாலை கிருஷ்ணன் கோவிலில் நடைபெற்ற உபநயனத்தின் போது நேரடியாகவும், கடித மூலமாகவும் செல்வனை ஆசீர்வதித்து வாழ்த்திப் பரிசில்கள் வழங்கிய அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

சு. சரவணபவானந்த சர்மா
தம்பதிகள்,

விசவத்தனை முருகன் கோவில்,
பண்ணாகம், சுழிபுரம். [10649]

## பிரதேசக் கல்வித் திணைக்களம்,
## நல்லூர் - யாழ்ப்பாணம்.

# கேள்வி அறிவித்தல்

ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப் புனருத்தாபன திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்குத் தேவையான உருக்கு மரத் தளபாடங்கள் கொள்வனவு செய்தல்.

01. கீழ்க் காணப்படும் உருக்குத் தளபாடங்களும் மரத்தளபாடங்களும் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள தேர்தல் தொகுதியிலுள்ள பாடசாலைகளுக்குத் தேவைப்படுகின்றன. இவை விநியோகிக்கக் கூடிய பாடசாலைகளின் பெயர்கள் மேற்படி திணைக்கள பொறியியலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலைகளுக்குத் தளபாடம் வழங்குவதற்கும் விநியோகிப்பதற்குமான முத்திரையிடப்பட்ட கேள்விகளை உருக்கிலான/மரத்திலான பாடசாலைத் தளபாடத்தை வழங்குபவரிடமிருந்து/உற்பத்தி செய்பவரிடமிருந்து யாழ்ப்பாணப் பிரதேச பிரதிக் கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவர் 1989 மே மாதம் 19ஆந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

02.
1. மாணவர் உருக்கு மேசைகள்.
2. மாணவர் உருக்கு கதிரைகள்.
3. பாலர் உருக்கு மேசைகள்.
4. பாலர் உருக்குக் கதிரைகள்.
5. தாங்கிகளுடன் கூடிய கரும்பலகை.
6. 2 லாச்சிகளுடன் கூடிய அதிபர் மேசைகள்.
7. ஒரு லாச்சி ஆசிரியர் மேசைகள்.
8. ஆசிரியர் கைப்பிடிக் கதிரைகள்.

03. விதித்துரைக்கப் பெற்ற படிவங்களில் இணைப்பிரதிகளிற் கேள்விப் பத்திரங்களை தயாரித்து கேள்விப் பத்திரங்களை இட்டனுப்பும் கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் ''பாடசாலை தளபாடத்திற்கான கேள்விப் பத்திரம்'' என எழுதப் பெற்று இவ்வலுவலகத்திலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் முடிவு நேரத்திற்கு முன்னர் இடப்படுதல் வேண்டும். அல்லது முடிவு நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். முடிவு நேரம் முடிந்ததும் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் பொழுது கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமாயிருக்கலாம்.

04. கேள்விப் படிவங்கள், கேள்வி நிபந்தனைகள், மாதிரிப் படங்கள், விபரக் கூற்றுக்கள் என்பனவற்றை மீளளிக்கப் பெறுத கட்டணமாகிய 100/- ரூபாவையும் மீளளிக்கத்தகு கட்டணமாகிய 500/- ரூபாவையும் செலுத்துவதன் பேரில் 16-05-89 திகதியன்று பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


05. கேள்விப்பத்திரகாரர்கள் ஒரு தொகுதிக்கோ பல தொகுதிகளுக்கோ தமது கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனி கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| உடுப்பிட்டித் தேர்தல் தொகுதி | I |
| ,, ,, | II |
| ,, ,, | III |
| ,, ,, | IV |
| பருத்தித்துறை தேர்தல் தொகுதி | I |
| ,, ,, | II |
| காங்கேசன்துறைத் தேர்தல் தொகுதி | I |
| ,, ,, | II |
| கோப்பாய்த் தேர்தல் தொகுதி | I |
| ,, ,, | II |
| யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதி | I |
| ,, ,, | II |
| ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதி | I |
| நல்லூர்த் தேர்தல் தொகுதி | I |
| சாவகச்சேரித் தேர்தல் தொகுதி | I |
| வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதி | I |

**செல்வி தி. பெரியதம்பி,**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
நல்லூர், யாழ்ப்பாணம். [சி-2308]

## கண்ணீர் அஞ்சலி



**சச்சிதானந்தம் தயாபரன் (தயா)**

தாயின் மடியில்: 21 - 10 - 1961 இறைவனடியில்: 14 - 04 - 1989

14-4-89இல் ஆலடி சம்பவத்தில் அகால மரணமடைந்த ஆருயிர் நண்பன் தயாவுக்கு எமது கண்ணீரஞ்சலிகள். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்கும் நோர்தேன் பார்மஸி ஸ்தாபனத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். அவர் தம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— எரிக் ராஜபக்ஸ ஸ்தாபனத்தார்.

[232]

## 5 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



**Dr. N. T. மூர்த்தி**

தோற்றம்: 01 – 02 1932 மறைவு: 23 – 04 – 1984

**திதி: 28 – 04 – 1989**

ஆண்டு ஐந்து சென்றாலும் ஆறுமோ எங்கள் உள்ளம்?
பாசமுடன் வாழ்ந்தோமே பாழும் விதி பிரித்ததுவே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
நளினி, முகுந்தன், சயந்தன், அஜந்தன்.

42, இராஜ வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். [205]

## ஈராண்டு நினைவஞ்சலி



**ஸ்ரீபோஸ் (சுவர்ணன்)**

மலர்வு: 10-07-1967 உதிர்வு: 22-04-1987

அன்பு மகனே! ஆசைத்தம்பியே! ஈராண்டு கடந்திடினும் உனையிழந்த துயர் நீங்கவில்லை, கண்ணீர் மழை ஓயவில்லை. உன்னை எண்ணும் போதெல்லாம் உச்சி வெடித்து உடல் கருகுதையா, தம்பி! பூவாய் உதிர்ந்தாலும் பொறுத்திருப்போம், பிஞ்சாகிக், காயாகிக், கனியும் பருவத்தில் கவர்ந்தானே காலன்! எம் இதயத் துடிப்பு இருக்கும்வரை உன் நினைவிருக்கும். உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

என்றும் உன் பிரிவால் துயருறும்:

அப்பா, அம்மா,
அக்காமார், தம்பிமார்,
உறவினர், நண்பர்கள்.

சிறுவிளான்,
இளவாலை. (2229)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப
மாய மகளிர் முயக்கு.

**பொருள்:**

வஞ்சம் நிறைந்த பொதுமகளிரின் சேர்க்கை, ஆராய்ந்தறியும் அறிவு இல்லாதவருக்கு அணங்கு தாக்கு (மோகினி மயக்கு) என்று கூறுவர்,


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
23- 04 - 1989 த. பெ. இல: 23


# அடிக்கடி ஏன் கால்நடை நோய்?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கால்நடைகளுக்கு ''புட்மவுத்'' எனப்படும் தொற்றுநோய் பரவி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அளவுக்கு அதிகமான உஷ்ணமும் இந்த நோய் உண்டாவதற்கு ஒரு காரணம் எனச்சொல்லப்படுகிறது.

கடந்த வருடம் ''றிங்கர் பெஸ்ட்'' எனப்படும் கோமாரி நோய் இப்பகுதியில் பரவி, கால்நடை வளர்ப்பவர்களுக்குப் பெரும் நஷ்டத்தை உண்டு பண்ணியது. வன்னிப் பகுதியில் இருந்து இறைச்சிக்காகக் கொண்டு வரப்படும் கால்நடைகள் மூலமே கோமாரி நோய் இங்கு பரவியதாக அப்போது கூறப்பட்டது.

''புட்மவுத்'' வியாதி பரவுவதற்கும் அப்படி ஒரு தொடர்பு உண்டா என்பது குறித்து இம்முறை எவ்வித தகவலும் இல்லை,

காரண காரியங்கள் எதுவாக இருந்தாலும், தொற்றுநோய் ஆபத்தால், யாழ்ப்பாணக் குடாநாட்டின் கால்நடை வளர்ப்புத் தொழில் பாதிக்கப்படுகிறது என்பது மட்டும் தெளிந்த நீரோடை போன்று வெளிச்சமானதாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பசும் புற்றரைகள், பிரமாண்டமான மேய்ச்சல் தரைகள் இல்லை என்பது உண்மைதான். ஆயினும் கால்நடை வளர்ப்பு இப்பகுதியில் வீட்டுத் தொழிலாக வளர்ந்துள்ளது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை,

வீட்டுக்கு வீடு மாடு, ஆடு வளர்க்கப்படுவதைக் காண்கிறோம். ஆகக் குறைந்தது ஒரு ஆடுதானும் இல்லாத ஒரு வீட்டைக் கண்டுபிடிப்பது இங்கு சஷ்டம். நகரப் பகுதிகளில்கூட கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. பலருக்குப் பொழுதுபோக்குத் தொழிலாகவும், வேறுபலருக்குப் பிரதான வருவாய்தரும் தொழிலாகவும், கால்நடை வளர்ப்பு இப்பகுதியில் பிரபல்யம் அடைந்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் கால்நடை வளர்ப்பு வீட்டுச் சிறுதொழிலாக மாறியுள்ளது என்றுகூடச் சொல்லலாம்.

இத்தகைய ஒரு தொழிலுக்குத் தகுந்த பாதுகாப்பு இல்லாமல் அது அடிக்கடி பாதிக்கப்படுவது குடாநாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கும். கால்நடை வளர்ப்புக் குறித்தும் பொது மக்களுக்கும் போதிய போதனை, அறிவு, ஊட்டப்படுவதாக இல்லை.

தொற்றுநோய் ஆபத்து ஏற்படும் வேளைகளில் மட்டும் தடுப்பு முறைகள், பாதுகாப்பு முறைகள் பற்றிப் பிரசாரம் செய்யப்படுகிறது. ஓரளவு கவனம் எடுக்கப்படுகிறது. அதற்குப் பின்னர் எல்லாம் தொய்ந்து, தளர்ந்து பூஜ்ய நிலைக்குப் போய்விடுகின்றன.

கால்நடை வளர்ப்பவர்களுக்குத் தேவையான போதனைகளும், உதவிகளும் இடைவெளி இல்லாமல் தொடரவேண்டும். இது விடயத்தில் சம்பந்தப்பட்ட சகலரும் அக்கறையுடன் செயற்படுதல் மிக அவசியம்.

பெரும் பண்ணைகள் என்ற மட்டத்தில் இல்லாவிட்டாலும் பரந்த பரிமாணத்தில், சிறுதொழில் என்ற அளவில் செய்யப்படுவதால், கால்நடை வளர்ப்பு இப்பகுதியின் பொருளாதாரத்தில் ஒரு எடை உள்ள — தாக்கம் தரவல்ல— தொழில் என்பதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணருவதாக இல்லை.

அந்த நிலை மாற வேண்டும். கால்நடை வளர்ப்பும் ஒரு பிரதான தொழில் என்ற உணர்வு சம்பந்தப்பட்ட சகலருக்கும் உண்டாக வேண்டும். சிறுகக் கட்டிப் பெருக வளர்க்கும் பொருளாதாரத் தாற்பரியம் இப்பகுதிக் கால்நடை வளர்ப்பில் பிரதிபலிக்கிறது.

கால் நடைகளுக்கு ஏற்படும் நோய்களை முன்னேற்பாடாகக் கண்டு பிடித்தல், நோய்வராமல் தடுத்தல், நோய் வந்த பின் சிகிச்சை அளித்துக் குணமாக்குதல் ஆகிய வசதிகள் இப்பகுதியில் இல்லை என்ற விடயமும் இங்கு மறைக்கப்படுவதற்கில்லை.

கால்நடைகளுக்கு உண்மையாகவே தொற்றுநோய் ஏற்பட்டிருக்கிறதா என்ற பரிசோதனையைச் செய்வதற்கு கண்டி, கொழும்புக்கே மாதிரிகளை அனுப்ப வேண்டி உள்ளது.

அதிகாரப் பரவலாக்கல் எனப் பீற்றப்பட்டாலும், பல அடிப்படை வசதிகள் கூட இன்னமும் மாவட்ட மட்டத்திற்குத் தானும் கொண்டு வரப்படவில்லை.

வடக்கு மாகாணத்தில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க அவதானிப்பு நிலையம் என்றோ ஆராய்ச்சி நிலையம் என்றோ எதுவும் இதுவரை இல்லை.

கொழும்பு அரசு, வெறும் அரசியல் விளையாட்டு நடத்திக் கொண்டிருக்காமல், தமிழ்ப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு தமிழ் மக்களுக்குப் பூரண அதிகாரம் வழங்கவேண்டும்.

ஆட்சி நிர்வாகம் பூரணமாக தமிழ் மக்கள் கைக்கு கைமாறும் வரை அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களாகவே வாழ்வார்கள் என்பதற்கு இது ஒரு சிறிய ஆனல் நல்ல உதாரணம்.

## பல்லவர்கால எழுத்துடன் 2 அடி கல்!

கும்பகோணம், ஏப்ரல் 22

கும்பகோணத்தை அடுத்துள்ள கிராமம் தாராபுரம்.

இங்கு நேற்று 2 அடி உயரமுள்ள கருங்கல் கண்டெடுக்கப்பட்டது.

இதில் ஒரு புறம் எழுத்துக்களும், மறுபுறம் வீரன் கேடயமும், போர்வாளும் கையில் ஏந்திய நிலையில் உள்ள காட்சி காணப்படுகிறது.

இது பல்லவர் காலம் அல்லது சோழர் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கும் என இந்திய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். (எ)

## நேட்டோ இராணுவ அமைப்பு அதிகாரிகளுடன் பமேலா நட்பு

லண்டன், ஏப்ரல் 22

சவூதி அரேபிய கோடீஸ்வரர் அத்நன் காஷொகி நடத்திய 'விலைமாதர் வலைக் குழு'வில் இந்திய அழகி பமேலாவும் ஒருவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

லண்டன் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள அழகி பமேலா தனது வாழ்க்கைஇரகசியங்களை குறிப்பிட முடியாத ஒரு தொகைப் பணத்துக்கு லண்டன் டெயிலி மெயில் பத்திரிகைக்கு விற்றுவிட்டார்.

பத்திரிகையின் சார்பாக பமேலாவுடன் இரண்டுவார காலம் பேட்டிகண்டு எடுத்த தகவல்களை பத்திரிகை நிறுவனம் அமெரிக்க சமஷ்டி புலனாய்வு பணியகத்திற்கு அனுப்பிவைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து கஷொகியை சுவிஸ்பொலீஸார் கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர்.

கஷொகியின் ஆயுதபேரத் தொடர்புகளுக்குப் பயன்படுத்தப் பட்டபாலியல்கரன்சி பமேலா என்ற தலைப்பில் டெயிலி மெயில் கட்டுரை வெளியிட்டிருக்கிறது.

1983 இல் பாரிஸில் கோடீஸ்வரர் கஷொகி கொக்டெயில் விருந்து ஒன்றை அளித்தார். அதில் பமேலாவும் கலந்து கொண்டார். அத்துடன் கஷொகியின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது.

கஷொகியுடன் உறவு வைத்திருந்ததாக பமேலா கூறினர்.

பிரத்தியேக விமானத்தில் தான் கஷொகி அழைக்கும் போதெல்லாம் பமேலா சென்று வந்தார்.

ஆயுத விற்பனை சம்பந்தமான பேரம் ஒன்றில் சவுதி அரேபியாவில் இளவரசர் முகமது என்பவரின் கையொப்பத்தைப் பெற வேண்டியிருந்தது. அதனைச் செய்ய பமேலாவை இளவரசரிடம் கஷொகி அனுப்பி வைத்தார்.

பின்னர் நேட்டோ இராணுவ அமைப்பு அதிகாரிகளுடன் பமேலா தொடர்பு வைத்திருந்தார்.

லிபியத் தலைவர் மும்மர் கடாபியின் மைத்துனர் அஹ்மத்கதாபி அல்டியம் என்பவருடன் பமேலர்வுக்கு நீண்ட காலத் தொடர்பு இருந்தது.

ஐரோப்பிய நாடுகளில் லிபியாவுக்கு ஆயுதங்கள் வாங்கும் முயற்சியில் கஷொகி ஒழுங்கு செய்த விருந்துகளில் பமேலா கலந்து கொண்டார்.

இத்தகவல்களைப் பமேலா தெரிவித்ததாக லண்டன் டெயிலி மெயில் கட்டுரை கூறுகிறது. (எ)

## தமிழ் நாடு சட்டசபை பொன்விழா

சென்னை, ஏப்ரல் 22

தமிழ் நாடு சட்டசபையின் பொன்விழா கொண்டாடப்படவுள்ளது.

சட்டசபையின் மூத்த உறுப்பினர்களை கௌரவிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இது சம்பந்தமான வைபவம் ஒன்று வருகிற மாதம் 5 ஆம் திகதி நடைபெறும் என்று சபாநாயகர் தமிழ் குடிமகன் அறிவித்தார். (எ)

## நேபாள-இந்தியத் தகராறு; பாகிஸ்தான் சமரச முயற்சி!

இஸ்லாமபாத், ஏப்ரல் 22

நேபாளத்துக்கும் இந்தியாவுக்கும் இடையேயான ராஜதந்திர நெருக்கடியைத் தீர்க்க பாகிஸ்தான் மத்தியஸ்த முயற்சிகளை மேற்கொள்ள முன்வந்திருக்கிறது.

சார்க் அமைப்பின் தற்போதைய தலைவர் என்ற முறையில் பாகிஸ்தான் பிரதமர் பெனசிர் பூட்டோ மத்தியஸ்த முயற்சியை மேற்கொள்ளுவார்.

இதற்கு முன்னேடியாக இந்தியா நேபாளம் பற்றிய தகராறுகளை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு பரிசிலனை செய்து வருவதாக அறிவிக்கப்பட்டது. (எ)

முடியாட்சிக்கு எதிராக

# ஜோர்தானில் தொடரும் கலவரம் கம்யூனிஸ்ட்கள் பலர் கைது

### மன்னர் ஹுசேன் அவசரமாக நாடு திரும்புகிறார்

அம்மான், ஏப். 22

ஜோர்தானில் அரசுக்கு எதிரான கலவரம் பரவிவருவதாக அறிவிக்கப்படுகிறது.

விலையுயர்வைக் கண்டித்து ஆரம்பமான கலவரங்கள் இப்போது மன்னர் ஹுசேனுக்கு எதிரான கலவரமாக மாறி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை அரசுப் படைகளுக்கும் கலகக்காரர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் எட்டுப்பேர் உயிரிழந்தனர்,

இக்கலவரங்களைப் பின்னணியில் இருந்து இயக்குவது யார் என்பது தெரியவில்லை.

ஆனால் அரசு 100க்கு மேற்பட்ட கம்யூனிஸ்ட் பிரமுகர்களைக் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளது.

கலவரங்கள் தலைநகரம் அம்மானுக்குப் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஜோர்தான் மன்னர் ஹுசேன் பிரிட்டனுக்கான தனது விஜயத்தை ரத்துச் செய்துவிட்டு அவசரமாக அமெரிக்காவில் இருந்து அம்மானுக்கு இன்று திரும்பினர்.

## 'அக்னி' பரிசோதனை ஒத்திவைப்பு

புதுடில்லி, ஏப்ரல் 22

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்தியா கடந்த வியாழக்கிழமை நடத்தவிருந்த நீண்டதூர ஏவுகணையான 'அக்னி'யின் பரிசோதனை ஒத்திவைக்கப்பட்டது. (எ)

## இங்கிலாந்தில் ராணிக்கு செல்வாக்கு

லண்டன், ஏப்ரல் 23

இங்கிலாந்து அரச குடும்பத்தில் எலிஸெபத் மகாராணியே இன்னமும் செல்வாக்கு பெற்றவராக திகழுகிறார் என்று ஆய்வு ஒன்றில் தெரியவந்திருக்கிறது

ராஜகுடும்பத்தைச் சேர்ந்த இளம் தலைமுறையினரே கூடுதலாக இங்கிலாந்து மக்களினல் நேசிக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்பட்டு வந்தது.

இது பொய் என்று நிரூபிக்கப்பட்டு விட்டதாக பிரிட்டிஷ் ரோயல் கண்காட்சிக்கு வந்து சென்ற பொதுமக்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளது.

எலிஸெபத் மகாராணி அவரது தாயார் ஆகியோரே மக்கள் மனதில் முதலிடம் பெறுகின்றனர்.

அதன் பின்னரே சார்ள்ஸ் இளவரசன் இடம்பெறுகிறார். (எ)

## பக்தாத்தில் பண்டைக்கால நகரம் கண்டுபிடிப்பு

நியுயோர்க், ஏப்ரல் 22

ஈராக் தலைநகர் பக்தாத்தில் இருந்து 100 மைல் தெற்கே மிகவும் பண்டைக்காலத்து நகர் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதை பொருள் ஆராய்ச்சியின் போது அங்கு கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு அது 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அந்த நகரம் இருந்திருக்கக் கூடும் என்று தெரியவந்துள்ளது.

## போர்த்துக்கல்லில் பொலிஸார் கலகம்

லிஸ்பன், ஏப்ரல் 22

போர்த்துகல்லில் பொலீஸார் தொழிற்சங்கம் அமைக்கும் முயற்சிக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பொலீஸார் நடத்திய ஆர்ப்பாட்டத்தை அடக்க கலகம் அடக்கும் பொலீஸாரை அரசு பயன்படுத்தியது. (எ)

## 1,340 காண்டாமிருகம்

புதுடில்லி, ஏப்ரல் 22

1984 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி இந்தியா முழுவதிலும் 1,340 காண்டாமிருகங்கள் இருந்தன

அதன் பிறகு கணக்கெடுக்கப்படவில்லை என்று இந்திய அரசு அறிவித்தது. [எ]

## லதாமங்கேஷ்கருக்கு பாக். அழைப்பு

பிரபல இந்தி பின்னணி பாடகி லதா மங்கேஷ்கருக்கு பாகிஸ்தான் தொலைக்காட்சி நிலையம் அழைப்பு விடுத்து உள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோ இதற்கு அனுமதி அளித்து விட்டார்.

லதா மங்கேஷ்கரை முறைப்படி பாகிஸ்தானுக்கு அழைப்பதற்காக அங்கிருந்து விரைவில் 2கொண்டபேர்குழுஒன்று பம்பாய்க்கு வர உள்ளது. (எ)

# பாடசாலைக் 'கலண்டர்' படியே வேலைநாட்கள் இருக்க வேண்டும்

### பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் குழு வலியுறுத்து

யாழ்ப்பாணம் ஏப், 23

பாடசாலைகளுக்கிடையே நிலவி வரும் ஏற்றத்தாழ்வு அகற்றப்பட வேண்டும். பின் தங்கிய பாடசாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும். பாடசாலையில் வேலை நாட்கள் பாடசாலைக் கலண்டரின்படியே நடத்தப்பட வேண்டும்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ் பிரதேசக்கிளையான வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரைக் கொண்ட குழு யாழ் பிரதி கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பியைப் பேட்டி கண்டபொழுது மேற்கண்ட கருத்துக்களை வலியுறுத்தினர்.

அவர்கள் தமது பேட்டியில் மேலும் வலியுறுத்தியதாவது:

கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

பாடசாலையிலிருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது வேதனைக்குரியது. ஆரம்பக் கல்வி எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயமாக அளிக்கப்பட வேண்டும்.

ஆசிரியர்களின் இடமாற்றம் வரையறுக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே நடைபெற வேண்டும். திறமை, சேவை மூப்பு ஆகியவற்றை கவனத்தில் கொண்டு எழுத்துப் பரீட்சையின் பெறுபேற்றுக்கு அதி முக்கியம் கொடுத்து தெரிவு நடைபெற வேண்டும்.

மறு பரீட்சை நடக்கும் வரை முன் நடந்த பரீட்சையின் அடிப்படையிலேயே அதிபர் நியமனம் நடைபெற வேண்டும். குறுகிய இடைக்காலத்தில் பதில் அதிபர் நியமிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் அப்பாடசாலையில் கடமையாற்றும் சிரேஷ்ட ஆசிரியரையே அதிபராக நியமிக்க வேண்டும்.

நடைபெற்று முடிந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை பெறுபேறு விரைவில் வெளியிடப்பட வேண்டும்.

பரீட்சை மேற்பார்வையாளர் நிரந்தர நோக்குநர் நியமனங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்கு அமைய இடம் பெறுவதை வன்மையாக எமது சங்கம் கண்டிக்கிறது.

பதவி, சேவை மூப்பு என்பனவற்றின் அடிப்படையில் பலருக்கும் சந்தர்ப்பம் வழங்கக் கூடியதாக சுழற்சிமுறையில் விண்ணப்பத்தின் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

விடைத்தாள் திருத்தும் விடயத்திலும் ஒழுங்கு முறை பின்பற்றப்பட வேண்டும்.

இப்படி அவர்கள்கோரிக்கை விடுத்தனர். [ச]

ஒரே நாளில்

## 85 ஆட்கொணர்வு மனுக்கள்

கொழும்பு, ஏப்ரல் 23

ஒரு நாளில் மட்டும் 85 ஆட்கொணர்வு மனுக்கள் கடந்த புதன்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு சாதனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இம்மனுக்களில் பொலீஸாரும் இராணுவத்தினரும் பிரதிவாதிகளாகக் காட்டப்பட்டுள்ளனர்.

இம்மனுக்களில் 21 மனுக்கள்சம்பந்தமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளை சட்டவைத்திய அதிகாரிமுன் ஆஜர் செய்வதுடன் அவரின் வைத்திய அறிக்கைகளையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி நீதியரசர் பிரியந்தா பெரெரா உத்தரவிட்டார்.

எஞ்சிய 62 மனுக்களில் பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் அனுப்பும்படி நீதியரசர் உத்தரவிட்டார்.

மனுக்களில் கைது செய்யப்பட்டவர்கள் துன்புறுத்தப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார்கள் என்றும் வேறுசிலர் காணமற்போய் விட்டனர் என்றும் கூறப்பட்டுள்ளது. (எ)

## அம்பிகைக்கு ஆராதனை

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்தில் 20ஆம்திகதி வியாழன் சித்திரா பௌர்ணமியன்று அம்பிகைக்கு விஷேட அபிஷேக ஆராதனைகளும் சித்திரைக் கஞ்சி நிவேதனமும் இடம்பெற்றன.

மாலை 4.30 மணிக்கு கன்னிப் பெண்கள்- சுமங்கலிகளின் தீபபூஜை வழிபாடு இடம்பெற்றது. திருவிளக்குப் பூஜைக் கிரியைகளை பிரம ஸ்ரீ குகதாசக் குருக்கள் நடத்தி வைத்தார். (க)

## காரைநகரில் கொள்ளை

காரைநகர், ஏப்ரல் 23

காரைநகர் புதுறோட்டில் உள்ள வீடொன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை 18 ஆம் திகதி நள்ளிரவு கள்வர்கள் புகுந்து சைக்கிள், மணிக்கூடு மற்றும் பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர். (உ-7?)

நற்பிரஜைகளை உருவாக்க

# ஆசிரியருடன் பெற்றோரும் இணைந்துசெயற்படவேண்டும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

'சிறந்த நற்பிரஜைகளை உருவாக்குவதற்கு ஆசிரியர்களுடன் பெற்றோரும் இணைந்து செயற்பட வேண்டும். மாணவனின் கல்வி ஒழுக்கம், வரவு ஆகியவை பற்றி அடிக்கடி பெற்றோர், அதிபர் ஆசிரியருடன் கலந்துரையாட வேண்டும்'

கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலய வெள்ளி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கல்வி அதிகாரி திரு. சி. புலேந்திரன் மேற்கண்டவாறு கூறினர்.

விழா வித்தியாலய அதிபர் திரு. க. தங்கராசாவின் தலைமையில் நடைபெற்றது.

திரு. தங்கராசா தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது; 1964 ஆம் ஆண்டு மூன்று ஆசிரியர்களுடனும் மிகக் குறைவான மாணவர்களுடனும் ஓலைக் குடிசையில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று 18 ஆசிரியர்களுடனும் மூன்று பெரிய கட்டடங்கள், விஞ்ஞான மனையியல் கூடங்களுடனும் காட்சி அளிக்கிறது. இக்கல்லூரியின் துரித வளர்சிக்கு உழைத்த முன்னள் அதிபர் அமரர் இரா.செல்வராசாவை இத்தருணத்தில் நினைவு கூருவது பொருத்தமானது.

இப்படி அவர் கூறினர்.

வித்தியாலயத்தில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்குப் பிரதம விருந்தினர் திரு. புலேந்திரன் பரிசில்களை வழங்கினர்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [ச]

## மலசலகூடம்

வடமராட்சி, ஏப்ரல் 23

மந்திகை அரசினர் வைத்தியசாலையின் நுழைவாயிலில் அமைந்திருக்கும் பொது மக்கள் பாவிப்பு மலசல கூடம் பழுதாகி பாவிக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் அதிலிருந்து எழும் நாற்றத்தினல் வைத்தியசாலைக்குச் செல்வோர் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்லவேண்டி இருக்கின்றது எனவும் கூறப்படுகிறது. (க-160)

## சட்டவிரோத மின் பாவனை

ஊர்காவற்றுறை, ஏப்ரல். 23

வேலணை மின் அத்தியட்சகர் பிரிவில் கரம்பன் கிழக்கு, நாரந்தனை ஆகிய இடங்களில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனல் நிரந்தர மின்பாவனையாளர்கள் திருப்தியான மின்சார விநியோகத்தை பெற முடியாது உள்ளனர். [க-16]




மனிதனே! நீ என்னை வணங்குவதற்காக அவகாசம் எடுத்துக் கொள். நான் உன் உள்ளத்தைச் செல்வத்தைக்கொண்டு நிரப்பி விடுகின்றேன். உனது வறுமையை அகற்றி விடுகின்றேன்: இல்லையேல், உன் உள்ளத்தைப் பல தொல்லைகளைக் கொண்டு நிரப்பி விடுவேன். உனக்கு ஏற்படும் வறுமையையும் அகற்ற மாட்டேன்.

ஸஹர் முடிவு: 4-25
நோன்பு திறக்கும் நேரம்: 6-20

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்
* குழந்தைகளுக்கான சகலவிதமான ஆடைகள்
* றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
**மயூரா சென்ரர்**
13 B, நவீன சந்தை, :: யாழ்ப்பாணம்.

# உதயன்

23 - 04 - 1989 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
* பட்டுப் புடைவைகள்
* பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
**மயூரா சென்ரர்**
13 B, நவீன சந்தை யாழ்ப்பாணம்.

## சூரிய சக்தியை பயன்படுத்தி பண்ணை ஒன்றில் சாதனை!

புதுடில்லி, ஏப்ரல் 23

உலகிலேயே முதல் தடவையாக குஜராத் மாநிலத்தில் பண்ணை ஒன்றில் சூரிய சக்தியைப் பயன்படுத்தி கண்ணுடி அமைப்பிற்குள் தாவரங்களை வளர்க்கும் போட்டோவால்வ் செக் முறை செயற்படத் தொடங்கி இருக்கிறது.

இந்த அமைப்பானது 24 மணி நேரத்தில் கீரைவகைகள், கால்நடைத் தீவனங்கள், மூலிகைகள் மற்றும் மலர்களையும் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.

இதனால் தினசரி ஆயிரம் கிலோ கிரும் கால் நடைத் தீவனங்களை உற்பத்தி செய்ய இயலும்.

சூரிய ஒளியை அதிகபட்சம் பயன்படுத்தி டிரான்ஸ்பரன்ட் கண்ணுடிக் கதவும் ஜன்னலும் கொண்டு இந்த அமைப்பு இருக்கிறது.

குஜராத் மாநிலத்தில் ஹிம்மத் நகரில் இது செயற்படுகிறது. (ஒ-எ)

## கிளிநொச்சி நகரில்
## ஸ்ரீலங்கா ராணுவம் இருந்த கட்டடம் ஒப்படைப்பு!

கிளிநொச்சி நகரமண்டப கட்டடத்தில் இதுவரை காலமும் முகாமிட்டிருந்த இலங்கை இராணுவத்தினர் இடம் மாறியுள்ளனர்.

அக்கட்டடம் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் அருகிலுள்ள நீர்ப்பாசன சபைக் கட்டடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

இந்த நகரமண்டபக் கட்டடத்திலேயே முன்னர் கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபையும், பொதுநூல்நிலையமும் இயங்கி வந்தன.

தற்போது துப்புரவாக்கும் வேலைகள் நடைபெறுகின்றன. இதேவேளை —

### வெளியேறப் பணிப்பு

இருபாலை கற்பக விநாயகர் ஆலயத்துக்குச் சமீபமாகவுள்ள [பருத்தித்துறை வீதி மருங்கே] சிலரை அவர்களது வீடுகளிலிருந்து வெளியேறும்படி கூறப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இப்பகுதியில் படையினர் முகாமிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. [ஒ-10]

### இன்றைய புதிய வெளியீடு

* முரளி * S. V. சேகர் * பல்லவி
* S.S சந்திரன்
நடித்த
**"தங்கமணி ரங்கமணி"**
[ஒறிஜினல் பிரதி]

**★ வீடியோ விமல் ★**

117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி மேல் மாடி,
யாழ்ப்பாணம்.

[237]

## திவாரியின் அமைச்சுமாற்றம்

புதுடில்லி, ஏப் 23

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் பதவியில் இருந்து திரு. கே. கே. திவாரி அகற்றப்பட்டார்.

தகவல் ஒலிபரப்பு இணை அமைச்சர் பதவி அவருக்குப் புதிதாக வழங்கப்பட்டது.

பிரதமரின் ஆலோசனையின் பேரில் இம் மாற்றம் செய்யப்பட்டதாக புதுடில்லியில் ஜனாதிபதி மாளிகை அறிக்கை ஒன்று தெரிவித்தது. (ஒ-எ)

## ரயில் நிலைய ஊழியர் பலி

மட்டக்களப்பு, ஏப் 23

இந்தியப்படை ஜவானின் துப்பாக்கி தற்செயலாக வெடித்ததில் கடமையிலிருந்த ரயில் நிலைய ஊழியர் ஒருவர் பலியானார்.

இச்சம்பவம் அண்மையில் வாழைச்சேனை ரயில் நிலையத்தில் நடைபெற்றது.

மரணமானவர் திரு. எஸ். தேவலிங்கம் வயது (28) என்பவராவார். (ஒ எ]

## இன்ஸ்பெக்டர் விளக்கமறியலில்

கொழும்பு, ஏப் 23

கடற்படை வீரர் ஒருவரையும் சிவிலியன் ஒருவரையும் சுட்டுக் கொலை செய்தது சம்பந்தமாக பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

இந்த பொலீஸ் இன்ஸ்பெக்டரின் மகளின் காதல் தொடர்பு சம்பந்தமாகவே இக் கொலைகள் தென்பகுதியில் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

### வடபகுதி. -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாகனம் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பின்னர் மேலும் ஒரு குளிரூட்டப்பட்ட ''பிக்அப்'' வாகனம் அனுப்பி வைக்கப்பட்டதாம்.

ஆனால் இப்பொழுது புதிய ''பிக்அப்'' வாகனம் ஒன்றை வழங்க வேண்டுமாயின் முன்னர் வழங்கிய வாகனத்தைத் திருப்பி அனுப்பி வைக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்படுகிறதாம். [ஒ-9]

## வீதியில் சோதனைக்குள்ளான பெண் பக்தர்கள் வேதனை

வல்வெட்டித்துறை, ஏப் 23

வல்லை முத்துமாரி அம்மன் தீர்த்த உற்சவத்தின் போது பக்தர்கள் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

முத்துமாரி அம்மன் கோவில் தீர்த்தோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை [21-4-89] நடைபெற்றது.

வழமைபோல அம்பாள் நெடியகாட்டுப் பிள்ளையார் ஆலய வழியாக, ஊறணி கடற்கரைக்குத் தீர்த்தமாடச் சென்றுள்.

பக்தர்களும் தீர்த்தமாடுவதற்காக ஊறணிக்குக் கால் நடையாகச் சென்றார்கள். அவ்வாறு சென்ற பெண் பக்தர்களை இராணுவத்தினர் வீதியில் நிறுத்திச் சோதனையிட்டது குறித்து வேதனை தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தீர்த்த உற்சவத்தையொட்டி பறக்கவிடப்பட்ட புகைக்குண்டுகளை, ஹெலிக்கொப்டரில் பறந்த படையினர் சுட்டனர். ஒரு புகைக்குண்டை மட்டுமே சுட்டு வீழ்த்த முடிந்தது.

தீர்த்தக் கடற்கரைக்கு வந்திருந்த இளைஞர்களில் சிலர் கைது செய்யப்பட்டனராயினும் விசாரணையின் பின் விடப்பட்டனர்.

இதேவேளை ஒலிபெருக்கி உரிமையாளர் ஒருவர் கத்திக் குத்துக்கு ஆளானர். அவரது ஒலிபெருக்கியே அம்பாள் தீர்த்தக்கரைக்குச் செல்வதை அறிவிக்க உபயோகிக்கப்பட்டதாக அறிய வந்தது. (அ-160)

### மக்களுக்கு அமைதியும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னும் காணப்படவேண்டி உள்ளது. 1987 யூலை உடன்படிக்கையில் முன்வைத்தபடி தமிழர் அபிலாசைகளை, நிறைவேற்ற செறிந்த முயற்சி எடுக்கும்படி நான் சகல பிரசைகளுக்கும் வேண்டுகோள் விடுக்க வேண்டிய நேரமாக இது உள்ளது.

இந்தப் பூமிக்கு சிரும், சிறப்பும், செந்தளிப்பும், மகோன்னத இலட்சியங்களின் மலர்வும் கிடைக்க வாழ்த்துகின்றேன்; மக்களுக்கு அமைதியும், சகல சம்பத்தும், முன்னேற்றமும் கிடைக்க வாழ்த்துகிறேன். இந்தப் பூமியின் எதிர்காலம் புகழுடையதாக அமையட்டும். உங்கள் இலட்சியங்களையும் அபிலாசைகளையும் நிறைவேற்றும் பாதையில் முன்னேற ஆண்டவன் உங்களை ஆசீர்வதித்து வழிகாட்டுவாராக.

எனக்கு நீங்கள் அளித்த அதே ஒத்துழைப்பையும், புரிந்துணர்வையும், நல்லெண்ணத்தையும் என்னுடைய பதவிக்குப் புதிதாக நியமனமாகியுள்ள புதியவருக்கும், எனது அலுவலகத்திற்கும் வழங்குவீர்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். (அ-க)

## இருவர் அடையாளம் காணப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

கடந்த வியாழக்கிழமை சுழிபுரம் பகுதியில் இடம்பெற்ற மோதலின் போது மரணமான மூன்று இளைஞர்களில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இராசையா ஜெபசீலகிருஷ்ணன் [இன்பம்] சித்தன்கேணியைச் சேர்ந்த வேலும் மயிலும் சிவகுமார் ஆகியோரே அந்த இருவருமாவர். [ஒ-10 9]

### கல்முனையில்.---.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்ட ஊரடங்குச் சட்டம் வியாழக்கிழமை தளர்த்தப்பட்டது.

எனினும் மீண்டும் பதற்ற நிலை அதிகரித்து நகரில் சில கடைகள் எரிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது. நிலைமை மோசம் அடைந்ததினால் நேற்று முதல் காலவரையறையற்ற விதத்தில் ஊரடங்கு நீடிக்கப்பட்டது.

பதற்ற நிலையைத் தணித்து அமைதியைக் கொண்டு வருவதற்காக அமைச்சர்கள் ரஞ்சன் விஜேரத்தினவும், ஏ.ஆர். மன்சூரும இன்று ஞாயிற்றுக்கிழமை கல்முனைக்கு விரைகிறார்கள்.

நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும் வரை ஊரடங்கு நீடிக்கப்படும் என்று இந்திய அமைதிப்படை வட்டாரங்கள் தெரிவித்தன. இருதரப்பாருக்கும் இடையில் சமரசத்தைக் கொண்டு வரத் தாமும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-எ)

### பூமி அழிவி.-.,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

போயிருக்கும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

விண்வெளி வரலாற்றில் சக்தி வாய்ந்த எரிகல் ஒன்று பூமிக்கு மிக நெருங்கிய தூரத்தில் வந்தது அண்மைக்காலத்தில் இதுவே முதற்தடவை என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

### ஆளுநர்.-.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எம். பிக்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

திரு. வெலகெதரவின் விருப்பத்துக்கிணங்க, அவரது உடல் கொழும்பு மருத்துவ பீடத்திடம் வருகிற திங்கட்கிழமை ஒப்படைக்கப்படும். (ஒ-எ)

## மரண அறிவித்தல்

### திருமதி சுபத்திரை இராஜலிங்கம்

நந்தாவில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி சுபத்திரை இராஜலிங்கம் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற ம. இராஜலிங்கம் (மலாயன் பென்சவியர்) அவர்களின் அன்பு மனைவியும், நடராஜா, காலஞ்சென்ற இரத்தினமலர் (சிங்கப்பூர்), இராஜதுரை (சிங்கப்பூர்) அவர்களின் அன்புத் தாயாரும், சபாபதி [சிங்கப்பூர்], மனோன்மணி [சிங்கப்பூர்], பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிங்கப்பூரைச் சேர்ந்த ரகுபதி, ஸ்ரீபதி, ஜெயபதி, தனபதி, குணபதி, மனோராஜ், சுபராஜ், சமிரா ஆகியோரினதும் காலஞ்சென்ற சிவராஜா, ரட்ணராஜா [பாரிஸ்], ஜெயராசா [பங்களாதேஷ்] குகராஜா, ரோகிணி, ராஜேந்திரா [பிறவுண்ஸ்] ஆகியோரின் அன்புப் பேத்தியும், சிங்கப்பூரைச் சேர்ந்த சங்கீதா, சுவித்தா, பூரணி, கைலாஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-4-89 இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் 1 மணி அளவில் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல் : இ. நடராஜா

நந்தாவில், கொக்குவில். [10661]

## மரண அறிவித்தல்கள்

### திரு. க. ஆனந்த நடராஜா

(Engineer District of Railway)

இல. 75, பிறவுண் வீதியைச் சேர்ந்த க. ஆனந்த நடராஜா 20. 4. 89 அன்று காலமாகி விட்டார் இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மகிதன் (Engineer-U. K) அமீலன் [Medical College, Ragama] அனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம்சென்ற திரு. கனகரத்தினம், திருமதி சி. கனகரத்தினம் அவர்களின் மருமகனும், திருமதி செல்லம்மாவின் அருமை மகனும், திரு. சுப்பிரமணியத்தின் பெருமகனும், திருமதி சரஸ்வதி தர்மராஜா, திருமதி சுசீலா ஜெயபாலன் (Canada), திருமதி பத்மாவதி சபாநாதன். (U. K], திரு. சுசானந்தன் [Canada] அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 23. 4. 89 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

75, Brown Road,
Jaffna. [233]

### திருமதி அன்னபூரணம் கனகநாயகம்

பண்ணாகத்தைச் சேர்ந்த திருமதி அன்னபூரணம் கனகநாயகம் 21-4-89இல் அகால மரணமானர். இவர் சின்னையா கனகநாயகம் [கொழும்பு] அவர்களின் அருமை மனைவியும், திருக்குமரன், அருட்குமரன் ஆகியோரின் அருமைத் தாயாரும், சோமசுந்தரம் மகேஸ்வரி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், தெய்வேந்திரம், நாகபூஷணி, சோம. திருச்செல்வம் (குவைத்) ஆகியோரின் அருமைத் தங்கையும், திருநாவுக்கரசு, யோகலட்சுமி, காலஞ்சென்ற தியாகராசா [ஆசிரியர்], சத்தியமூர்த்தி, சோதிநாதன், காலஞ்சென்ற கோமளாதேவி, தயாபரசிவம், அன்னரத்தினம், வைகுந்தவாசன், திலகவதி, வள்ளுவதாசன் ஆகியோரின் மைத்துனியும், கனகசபை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சேதுகாவலர் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 23-4-89 ஞாயிற்றுக்கிழமை 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாலை 2 மணிக்கு திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சி. கனகநாயகம் [கொழும்பு]

பண்ணாகம், சுழிபுரம். (246)

### கமலாம்பாள் சோமசுந்தரம்

கமலாம்பாள் சோமசுந்தரம் காலமானர். அன்னார் கொழும்புத்துறையைச் சேர்ந்த காலம் சென்ற உடையார் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலம் சென்ற சோமசுந்தரத்தின் அன்புச் சகோதரியும் Dr. திரிலோகநாதன் (U. K), Dr. தியாகராஜா (U. K) காலம் சென்ற லோகேஸ்வரன் (சட்டத்தரணி), ஞானம்பாள், சந்திராம்பாள் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருஞானேஸ்வரி, Dr. சுசிலா (U. K), அரவிந்தா (ஆசிரியை அத்தியார் இந்துக்கல்லூரி), உமாபதி சிவம் (கணக்காளர்), பாலசுப்பிரமணியம் (கணக்காளர்-சபா) ஆகியோரின் மாமியாரும், மதியழகன், ஆரணி, பிரசாந்தன், அஜந்தா, அமலன். அமிர்தன், அகிலன் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 50, சென். லோறன்ஸ் வீதி, வெள்ளவத்தையிலிருந்து தகனக்கிரியைக்காக 24-04-89 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்;
திருமதி அ. லோகேஸ்வரன்

[10660]

### திருமதி பாறுப்பிள்ளை மாணிக்கம் (சின்னம்மா)

உசன் திருமதி பாறுப்பிள்ளை(சின்னம்மா)மாணிக்கம் 21-04-1989 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலம்சென்ற கதிரேசு மாணிக்கத்தின் அன்பு மனைவியும், பராசக்தி, பூரணம் (ஆசிரியை, அமிர்தாம்பிகை வித்தியாசாலை, சாவகச்சேரி), பரமநாதன் (அதிபர், பண்டாரிக்குளம் வித்தியாலயம், வவுனியா), காலம்சென்ற பத்மநாதன் (முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், யாழ். மாநகர சபை), பரிமளம், பவளநாதன் (ஓய்வு பெற்ற கணக்காய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகராசா (ஓய்வு பெற்ற மின்சார சபை உத்தியோகத்தர் , சிவபாக்கியம், பரமேஸ்வரி, கனகசுந்தரம் (காகோ போட் டிஸ்பாச் கொம்பனி, கொழும்பு), சித்திராதேவி (கணக்காய்வு உத்தியோகத்தர், நகர சபை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரி, ரவீந்திரன் (நோர்வே), குமுதினி, சுரேந்திரன், பார்த்தீபன், கவிதா, காண்டீபன், நந்தீபன், கோமதி, கோமகன், அகிலன், அருந்ததி, அச்சுதன், நிருசாந்தி, உமாசாந்தி, பிரியந்தன், கனகரத்தினம், சரோஜினிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் பேத்தியாரும், கார்த்திகா, துஷித்தா, துஷானி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-04-1989 இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் உசனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
மா. பவளநாதன்

உசன்,
மிருசுவில். [238]

## Andriesz Products

### SEA FOODS

| | |
|---|---|
| ★ பதப்படுத்திய இறால் — (Cooked Prawns - 300 gr) — | Rs. 30.00 |
| ★ உடைத்த இறால் — (Peeled Prawns - 300 gr) — | Rs. 30.00 |
| ★ கணவாய் — Cuttle Fish - 500 gr) — | Rs. 9.00 |
| ★ துப்பரவாக்கிய கணவாய் — Dressed Cuttle Fish - 200 gr) | Rs. 20.00 |
| ★ சிங்க இறால் — (Lobster Meat - 300 gr) — | Rs. 20.00 |
| ★ பாரை மீன் துண்டு — (Paraw Fish Fillets - 100 gr) — | Rs. 6.50 |
| ★ விளை மீன் துண்டு — (Mullet Fish Fillets - 100 gr — | Rs. 6.00 |
| ★ கயல் மீன் துண்டு — (Kayal Fish Fillets - 100 gr) — | Rs. 7.00 |
| ★ மணலை மீன் துண்டு — (Manalai Fish Fillets - 100 gr) — | Rs. 4.00 |
| ★ முரல் மீன் துண்டு — Mural Fish Fillets - 100 gr — | Rs. 7.00 |
| ★ சூரை மீன் துண்டு — (Soorai Fish Fillets - 100 gr) — | Rs. 7.00 |
| ★ அறுக்குளா மீன் துண்டு — (Seer Fish Fillets - 100 gr) — | Rs. 9.00 |
| ★ சுறு மீன் துண்டு — (Shark Fish Fillets - 100gr) — | Rs. 8.00 |
| ★ கலவாய் மீன்துண்டு — Kalavai Fish Fillets - 100gr) — | Rs. 5.50 |
| ★ கடல் விரால் மீன்துண்டு — (Kadalviral Fish Fillets - 100g ) — | Rs. 7.00 |
| ★ நண்டு — (Crabs - 100gr) — | Rs. 2.25 |
| ★ பதப்படுத்திய நண்டு — (Cooked Crab - 100gr) — | Rs. 2.25 |
| ★ உடைத்த நண்டு — (Crab Meat - 200gr) — | Rs. 21.00 |
| ★ கும்பிளான் மீன் — (Kumbilan Fish - 500gr) — | Rs. 25.00 |

விநியோகஸ்தர்:

**மெடிக்கல் ஹோல்**

இல 224, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[C-2312]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 23 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.